# தமிழ்நாடு SSM பொறியியற் கல்லூரி வழங்கும் புலமைப் பரிசில் திட்டம், 2010

2009 ஆம் வருடம் க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சைக்குத் தோற்றி, சித்தி பெற்ற பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள தமிழ்மொழிமூல மாணவர்கள் இந்திய பல்கலைக்கழகமொன்றில் பொறியியல் (எந்திரவியல், தொடர்பூட்டல், இலத்திரனியல்), கலை மற்றும் வர்த்தக கற்கைநெறியை பின்பற்றுவதற்கான புலமைப் பரிசில் திட்டமொன்றை தமிழ்நாடு, நாமக்கல் மாவட்ட கோமரபாளயத்திலுள்ள SSM கல்லூரி வழங்கவுள்ளது.

## இப்புலமைப் பரிசிலுக்கான பொதுப் பிரமாணங்கள்

**1. அடிப்படைத் தகைமைகள்**

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் தமிழ்மொழியும் கணிதமும் உட்பட 6 கட்டாயப் பாடங்களில் சித்தி பெற்று அவற்றுள் குறைந்தபட்சம் 3 பாடங்களில் திறமை சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சைப் பாடங்கள் மூன்றிலும் குறைந்தபட்சம் சாதாரண சித்தியாதல் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது, 2010.08.30 அன்று உள்ளபடி 22 வருடங்களுக்குக் கூடுதலாக இருக்கக் கூடாது.

**2. தெரிவுக்கான முன்னுரிமை**

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குடும்ப சூழலிலுள்ள பிள்ளைகளுக்கு தெரிவில் முன்னுரிமை வழங்கப்படும்.

**3. சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

விண்ணப்பதாரியின் (i) பிறப்புச் சான்றிதழ் (ii) க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சைப் பெறுபேறு (iii) க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சைப் பெறுபேறு (iv) தேசிய ஆளடையாள அட்டை (v) பாடசாலை விடுகைப் பத்திரம் (vi) இறுதியாக கல்வி பயின்ற பாடாலையின் அதிபரிடமிருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ் (vii) கிராம அலுவலர் உறுதிபடுத்திய பெற்றோர் / சட்டரிதியான பாதுகாவலர் வதிவும் வதிவு காலமும் பற்றிய சான்றிதழ் (viii) குடும்ப அங்கத்தவர்களின் தேறிய மாத வருமான அறிக்கை (பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் அரசதுறை அல்லது தனியார்துறை ஊழியராயின், நிறுவனத் தலைவரிடமிருந்தும் பெருந்தோட்ட ஊழியராயின், தோட்ட முகாமையாளரிடமிருந்தும் சுயதொழில் புரிவோரும் ஏனையோரும் உரிய கிராம அலுவரிடமிருந்தும் மாத வருமானம் பற்றிய அறிக்கையை பெற்றுக் கொள்ளல் வேண்டும்)

மேலே குறித்துரைக்கப்பட்ட மூல ஆவணங்களின் புகைப்படப் பிரதிகளை பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் தாமே உறுதிப்படுத்தி, அவற்றை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துக் கொள்ளல் வேண்டும். மேலும், விண்ணப்பதாரி, நேர்முகத் தேர்வின் போது இம்மூல ஆவணங்களை சமர்ப்பிக்க தயாராகவும் இருத்தல் வேண்டும்.

**4. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரியும் முடிவுத் திகதியும்**

பொறியியல், கலை மற்றும் வர்த்தகம் ஆகிய கற்கைநெறிகளுள் ஒன்றை மட்டுமே விண்ணப்பதாரி ஒருவர் தெரிவுசெய்ய முடியும். தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட படிவத்தை பூர்த்திசெய்து, அதனுடன் பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலர் உறுதிப்படுத்திய மேலே 3இல் குறித்துரைத்த ஆவணங்களின் புகைப்படப் பிரதிகளையும் பின்னிணைத்து பதிவுத்தபாலில் எதிர்வரும் 2010.08.27ஆந்திகதிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபாலுறையின் இடதுபுற மேன்மூலையில் **"Application for a Scholarship – SM College of Engineering"** எனவும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பிந்தியதாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**Mr. S. Karunakaran, Project Chairman,**
**PAN Audio, No 3, 1/1, Station Road, Kollupitiya, Colombo 3.**

## 5. பொது விடயங்கள்

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு வார காலப்பகுதிக்குள் தமது இந்தியப் பிரயாணத்திற்கான கடவுச்சீட்டு மற்றும் விசா ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இது தொடர்பில் உதவி தேவைப்படுவோர் திட்டப் பணிப்பாளர் திரு. கே. கருணாகரன் அவர்களை அணுகவும்.

இப்புலமைப் பரிசில் திட்டம் தொடர்பில் திட்டப் பணிப்பாளர் திரு. கே. கருணாகரன் அவர்களே நிறைவேற்றுப் பொறுப்பாளர் ஆவார். எந்தவொரு தனிநபரோ அன்றி வேறும் நிறுவனங்களோ புலமைப் பரிசில் திட்டத்தின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளாக இலங்கையிலும் இந்தியாவிலும் நியமிக்கப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், பல்கலைக்கழக பரீட்சைக் கட்டணங்கள், வதிவிடம் மற்றும் உணவு வசதிகளின் பொருட்டு வருடமொன்றிற்கு ரூபா 10,000.00 உம் வருடத்திற்கு ஒரு தடவை இலங்கை சென்று வர விமான போக்குவரத்து செலவும் பெறத் தகுதியுடையவராவார்.

## 6. தெரிவுசெய்வதற்கான நடைமுறைகள்

குறிப்பிட்ட நாள் வரை கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் பரீசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். உரியவாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்களும் மேலே 3இல் குறித்துரைத்த ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளை முழுமையாகக் கொண்டிராத விண்ணப்பப் படிவங்களும் இன்னும், மேலே 1இல் குறித்துரைத்த தேவையான அடிப்படைத் தகைமைகளை கொண்டிராத விண்ணபதாரிகளின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுவதுடன் இவர்கள் நேர்முகத்தேர்வுக்கும் அழைக்கப்பட மாட்டார்கள்.

தெரிவுக்கான தகைமையை கொண்டுள்ள விண்ணபதாரிகள் தொலைபேசி மூலமும் கடிதம் மூலமும் நேர்முகத் தேர்வுக்கு தோற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள். மேலும் இவர்கள் 3இல் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்கத் தயாராகவும் இருத்தல் வேண்டும். குறைந்த எண்ணிக்கையானோரேயே தெரிவுசெய்ய வேண்டியுள்ளதால், நேர்முகத்தேர்வில், மூலப்பிரதிகளை முழுமையாக சமர்ப்பிக்கத் தவறிய விண்ணபதரிகளின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படக் கூடும்.

திட்டப்பணிப்பாளரால் நியமிக்கப்படும் ஏழு பேர் அடங்கிய தேர்வுக்குழுவொன்று தெரிவுக்கான நடைமுறைகளுக்கும் கற்கைநெறி அடிப்படையில் புலமைப் பரிசில் பயனாளிகளை தெரிவுசெய்வதற்கும் பொறுப்பானதாக இருக்கும். தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானதாகும். எந்தவொரு மேன்முறையீட்டு நடவடிக்கைகளும் ஊக்குவிக்கப்பட மாட்டாது.

# இலங்கை இந்திய சமுதாயப் பேரவை வழங்கும் இந்திய பல்கலைக்கழக புலமைப் பரிசில் பெறுவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

**2010 ஆம் ஆண்டில் பொறியியல், கலை, வர்த்தகம் ஆகிய கற்கைநெறிகளுள் ஒன்றில் இந்தியப் பல்கலைக்கழக புலமைப் பரிசில் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்.**

உரிய கூட்டில் 'X' என அடையாளமிடுங்கள்.

**01 விண்ணப்பிக்கும் பாடநெறி:**

எந்திரவியல் ☐ இலத்திரனியல் ☐ தொடர்பூட்டல் ☐ கலை ☐ வர்த்தகம் ☐

**02 விண்ணப்பதாரர் பற்றிய விபரம்**

**2.1 முழுப்பெயர்:** ____________________

**2.2 முதலெழுத்துக்களுடன் பெயர்:** ____________________

**2.3 பால்:** ஆண் ☐ பெண் ☐

**2.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:** ____________________

**2.5 பிறந்த திகதி:** வருடம் ________ மாதம் ________ நாள் ________

**2.7 சமயம்:** ____________________

**2.8** வயது: 2010.08.30 ஆந்திகதி உள்ளபடி வருடம் ________ மாதம் ________ நாள் ________

**03 கல்வி பயின்ற பாடசாலைகளும் கல்வி அடைவுகளும்**

**3.1** க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைப் பெயரும் முகவரியும்:

____________________

**3.2 பாடசாலை அமைந்துள்ள நிர்வாக மாவட்டம்:** ____________________

**3.3 இப் பரீட்சைக்குத் தோற்றிய வருடம்** ________ **3.4 பரீட்சைச் சுட்டெண்** ________

**3.5 க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை பெறுபேறுகள்**

| பாடங்கள் | பெறுபேறு | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

**3.6 க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைப் பெயரும் முகவரியும்:**

____________________

**3.7 பாடசாலை அமைந்துள்ள நிர்வாக மாவட்டம்:** ____________________

**3.8 இப் பரீட்சைக்குத் தோற்றிய வருடம்** ________ **3.9 பரீட்சைச் சுட்டெண்:** ________

**3.10 க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை பெறுபேறுகள்**

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

**04. விண்ணப்பதாரியின் பெற்றோர் சட்டரீதியான பாதுகாவலர் விபரம்**

4.1 முழுப்பெயர்: ______________________________

4.2 முதலெழுத்துக்களுடன் பெயர்: ______________________________

**4.3** தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ______________________________

**4.4 இனம்:** இலங்கைத் தமிழர் ☐ இந்திய வம்சாவளித் தமிழர் ☐ முஸ்லிம் ☐ சிங்களவர் ☐

4.5 நிரந்தர முகவரியும் தொலைபேசி இலக்கமும்: ______________________________

______________________________ தொலைபேசி ______________

4.6 வசிக்கும் நிர்வாக மாவட்டம்: ______________________________

4.7 வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு: ______________________________

4.8 வசிக்கும் கிராம சேவை அலுவலர் பிரிவு: ______________ இலக்கம்: __________

**4.9** குடும்ப உறுப்பினர் தொகை: ______________

**05** குடும்ப உறுப்பினர்களின் திரட்டிய மாத வருமானம்

**5.1** பல்வேறு வழிமூலங்கள் வாயிலாக குடும்ப உறுப்பினர்களுக்குக் கிடைக்கப் பெறுகின்ற திரட்டிய மாத வருமானம் (பிற புலமைப் பரிசில்கள், சமுர்த்தி கொடுப்பனவு, சுயதொழில் வாய்ப்பு உட்பட): மேலும், வருமானமானது அறிவுறுத்தல்களுக்கிணங்க உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

| பெயர் | உறவுமுறை | தொழில் | திரட்டிய மாத வருமானம் |
|---|---|---|---|
| | விண்ணப்பதாரி | | |
| | தந்தை | | |
| | தாய் | | |
| | | | |
| | | | |
| | | | |

மேலே என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் செம்மையானவையும் ஆகுமென இத்தால் உறுதிப்படுத்தி, கீழே கையொப்பம் இடுகின்றேன்.

திகதி: ______________

______________________________
பெற்றோர் சட்டரீதியான பாதுகாவலர் ஒப்பம்

பூரணப்படுத்தப்பட்ட தரவுகள் யாவும் உண்மையானவை என்றும் புலமைப் பரிசில் தெரிவுப் பிரமாணங்களுக்கு இசைவாக நடந்து கொள்வேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

திகதி: ______________

______________________________
விண்ணப்பதாரியின் ஒப்பம்